No. of Printed Pages : 12

**5063**

பதிவு எண்
Register Number

| | | | | | |
|---|---|---|---|---|---|

# PART - III

# வணிகவியல் / COMMERCE

( தமிழ் மற்றும் ஆங்கில வழி / Tamil & English Versions)

நேரம் : 3 மணி ]
Time Allowed : 3 Hours ]

மொத்த மதிப்பெண்கள் : 200
[Maximum Marks : 200

**அறிவுரை :** (1) அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கறுப்பு மையினை மட்டுமே எழுதுவதற்குப் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

**Instructions :** (1) Check the question paper for fairness of printing. If there is any lack of fairness, inform the Hall Supervisor immediately.

(2) Use Black or Blue ink to write and pencil to draw diagrams.

## பகுதி - அ / PART - A

குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விடையளி.

**Note :** Answer all the questions.

**I.** சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. **40x1=40**

Choose the correct answer.

1. பதிவு கட்டாயமாக்கப்பட்டுள்ள அமைப்பு :

(அ) தனி வணிகர் (ஆ) கூட்டாண்மை

(இ) கூட்டுப்பங்கு நிறுமம் (ஈ) இந்துக் கூட்டுக் குடும்பம்

Registration is compulsory in the case of :

(a) A sole trader (b) A partnership

(c) A Joint Stock Company (d) A joint hindu family business

2. கூட்டுறவு அமைப்பில் :

(அ) ஒரு பங்கு - ஒரு வாக்கு முறை கடைபிடிக்கப்படுகிறது

(ஆ) ஒரு நபர் - ஒரு வாக்கு முறை கடைபிடிக்கப்படுகிறது.

(இ) ஒரு நபருக்கு இரு வாக்குரிமைகள் உண்டு

(ஈ) பங்குகள் மாற்றியல்பு தன்மை கொண்டவை.

In a Co-operative Society :

(a) One share one vote principle is followed

(b) One man one vote principle is followed

(c) A member must have 2 votes

(d) Shares are transferable

3. தனியாள் வணிகத்தில் :

(அ) வியாபார இரகசியங்களைக் காக்க இயலாது

(ஆ) வியாபார இரகசியங்களைக் காக்க இயலும்

(இ) இரண்டுமில்லை

A sole trader :

(a) Cannot keep his business secrets

(b) Can keep his business secrets

(c) None of the above

4. தனியாள் வணிகரின் பொறுப்பு :

(அ) முதலுக்கு ஏற்ப வரையறுக்கப்பட்டது.

(ஆ) சொத்துக்கு ஏற்ப வரையறுக்கப்பட்டது.

(இ) வரையறையில்லாதது.

The liability of a Sole trader is :

(a) Limited only to his investment in the business

(b) Limited to total property of the business

(c) Unlimited

5. கூட்டாண்மை உண்டாக்கப்படுவது :

(அ) ஒப்பந்தத்தால்

(ஆ) கூட்டாளிகளிடையே உறவு

(இ) அரசின் வழிகாட்டல்

A partnership is formed by :

(a) Agreement

(b) Relationship among persons

(c) The direction of government

6. கூட்டாண்மை நிறுவனம் பதிவு செய்தல் :

(அ) 1949 சட்டம் (ஆ) 1956 சட்டம் (இ) 1932 சட்டம்

A Partnership firm may be registered under :

(a) 1949 Act (b) 1956 Act (c) 1932 Act

7. வங்கித் தொழிலாயின் கூட்டாண்மையில் அதிக பட்ச உறுப்பினர்களின் எண்ணிக்கை :

(அ) 5 (ஆ) 10 (இ) 20 (ஈ) 25

The maximum number of members in banking firm is :

(a) 5 (b) 10 (c) 20 (d) 25

8. தனி வரையறு நிறுமத்தில் குறைந்த அளவு உறுப்பினர்களின் எண்ணிக்கை :

(அ) 2 (ஆ) 3 (இ) 7 (ஈ) 10

The minimum number of members for a private limited company is :

(a) 2 (b) 3 (c) 7 (d) 10

9. நிறுமங்கள் சட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணை A என்பது :

(அ) நிகழ்ச்சிக் குறிப்பேட்டின் மாதிரி

(ஆ) இருப்பு நிலைக் குறிப்பின் மாதிரிப் படிவம்

(இ) நிறுமச் செயல்முறை விதிகளின் மாதிரி

(ஈ) நிறும அமைப்பு முறையேட்டின் மாதிரி

Table A of the Companies Act is a :

(a) Model minutes book

(b) Model form of balance sheet

(c) Model of Articles of Association

(d) Model of memorandum of association

10. கீழ்க்கண்ட சூழ்நிலைகளுள் எப்பொழுது கடனீட்டுப் பத்திரதாரர்கள் வட்டி பெறும் உரிமை பெற்றுள்ளனர்?

(அ) நிறுமம் லாபம் ஈட்டும் பொழுது மட்டும்

(ஆ) பங்குநர்கள் பங்காதாயம் பெறும் பொழுது

(இ) நட்டம் ஏற்படும் ஆண்டு உட்பட எந்த ஆண்டிலும்

(ஈ) மேற் சொன்ன அனைத்து சூழ்நிலையிலும்

Debenture holders are entitled to receive interest in which of the following circumstances ?

(a) When there are profits

(b) When shareholders get dividend

(c) Every year irrespective of loss

(d) All the above

11. ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் கீழ்க்கண்டவற்றுள் எந்நடவடிக்கை வழக்கமாக மேற்கொள்ளப்பட மாட்டாது?

(அ) தணிக்கையர் நியமனம்

(ஆ) கடனீட்டுப் பத்திர வெளியீடு

(இ) பதவி விலகுமிடத்திற்கு இயக்குநர்களை நியமித்தல்

(ஈ) பங்காதாயம் விளம்பப்படல்

Which of the following business is not transacted at the Annual General Meeting ?

(a) Appointment of auditors

(b) Issue of debentures

(c) Appointment of directors in place of those retiring

(d) Declaration of dividend

12. நிறுமச் செயலர் ஒருவர் நியமிக்கப்படுவது :

(அ) அரசால்

(ஆ) இந்திய நிறுமச் செயலர்கள் அமைப்பால்

(இ) இயக்குநர் அவையால்

(ஈ) ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் பங்குநர்களால்

A Company Secretary is appointed by :

(a) Government

(b) The Institute of Company Secretaries of India

(c) The Board of Directors

(d) Shareholders in Annual General Meeting

13. __________ எண்ணிக்கைக்கு மிகாத பொது வரையறு நிறுமங்களில் ஒரே நேரத்தில் ஒரு நபர், இயக்குநர் பதவி வகிக்கலாம்.

(அ) 10 (ஆ) 15 (இ) 20 (ஈ) வரம்பில்லை

A person can hold directorship of not more than __________ public limited Companies.

(a) 10 (b) 15 (c) 20 (d) limitless

14. பங்கு மாற்றகங்கள் இவற்றின் வணிகத்தை அனுமதிக்கிறது :

(அ) நிறுமத்தின் எல்லாப் பங்குகளையும்

(ஆ) அரசால் வெளியிடப்படுகின்ற பிணையங்கள்

(இ) பட்டியலிடப்பட்ட பத்திரங்கள்

(ஈ) பட்டியலிடப்படாத பத்திரங்கள்

Stock exchange allow trading in :

(a) All types of shares of a Company

(b) Bonds issued by the Government

(c) Listed Securities

(d) Unlisted Securities

15. பங்கு மாற்றகங்கள் இதில் ஈடுபட்டிருக்கிறது :

(அ) சரக்கு (ஆ) சேவை

(இ) நிதிப் பத்திரங்கள் (ஈ) நாட்டின் பணம்

Stock Exchanges deal in :

(a) Goods (b) Services

(c) Financial Securities (d) Country's currency

16. இந்தியாவிலுள்ள ஏற்பிசைவு பெற்ற பங்கு மாற்றகங்களின் எண்ணிக்கை :

(அ) 20 (ஆ) 21 (இ) 22 (ஈ) 24

Number of recognised stock exchange in India :

(a) 20 (b) 21 (c) 22 (d) 24

17. கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினர்கள் பங்குகள் :

(அ) மாற்ற முடியும் (ஆ) திருப்பி செலுத்தக் கூடியது

(இ) திருப்பி செலுத்த முடியாது (ஈ) இவற்றில் ஏதுமில்லை

In a Co-operative Society, the shares of a member :

(a) Can be transferred (b) Can be repaid

(c) Cannot be repaid (d) None of the above

18. மத்திய கூட்டுறவு வங்கி தொடங்கப்படுவது ________.

(அ) கிராமங்களில் (ஆ) மாவட்ட தலைநகரங்களில்

(இ) மாநில தலைநகரங்களில் (ஈ) நகர்ப்புறங்களில்

Central Co-operative bank is established at :

(a) Villages (b) District headquarters

(c) State headquarters (d) Urban areas

19. பொது மக்களும் இந்நிறுவனத்தின் பங்குகளை வாங்கலாம் :

(அ) துறைவாரி அமைப்பு (ஆ) பொதுக் கழகம்

(இ) அரசு நிறுமம் (ஈ) மேற்கூறிய ஏதுமில்லை

Public can also subscribe to the share-capital of :

(a) Departmental undertaking (b) Public Corporation

(c) Government Company (d) None of these

20. அரசு நிறுமத்தில் அரசு கொண்டிருக்க வேண்டிய குறைந்தபட்ச பங்கு முதல் :

(அ) 51 விழுக்காடு (ஆ) 60 விழுக்காடு

(இ) 75 விழுக்காடு (ஈ) 90 விழுக்காடு

In a government company the share-capital of the government must not be less than :

(a) 51% (b) 60%

(c) 75% (d) 90%

**II.** கோடிட்ட இடங்களை நிரப்புக.

Fill in the blanks.

21. தொலைதூர ஒலிபரப்பு ________ அமைப்பின் கீழ் வருகிறது. துறைமுறை / துறைவாரி
Broadcasting comes under ________ form of organisation.

22. வில்லியம் பேசட் அவர்கள் "உலகிலேயே தனிநபர் கட்டுப்பாடு தான் சிறந்தது" என்று கூறுகிறார்.
________ has said that one man control is the best in the world.

23. கூட்டாண்மை நிறுவனத்தில் லாபநட்டம் ஒப்புக்கொண்ட விகிதத்தில் பகிர்ந்தளிக்கப்படுகிறது.
The profit and loss of a partnership firm is shared in the ________ among the partners.

24. கூட்டாண்மை கலைப்பு என்பது கூட்டாளிகளின் உடன்பாடு முடிவுக்கு வருவதாகும்.
________ means the termination of the original partnership agreement.

25. இணை — வினை என்பது தற்காலிகமாக ஏற்படுத்தப்பட்ட கூட்டாண்மையாகும்.
________ is a temporary partnership.

26. ஒரு கூட்டாண்மை அமைப்பில் ஒவ்வொரு தனிப்பட்ட உறுப்பினரும் கூட்டாளிகள் என்று அழைக்கப்படுகின்றனர்.
Persons who enter into partnership are individually called as ________.

27. ஒரு நிறுமத்தின் அக மேலாண்மை குறித்த விவரங்கள் அடங்கியிருப்பது செயல்முறை விதிகள்
The manner in which the internal management of a company carried on is contained in ________ .

28. நிலுவையிலுள்ள பங்காதாயம் பெற உரிமையுள்ள முன்னுரிமைப் பங்குகள் ________ என அழைக்கப்படுகின்றன. குவி முன்னுரிமைப் பங்குகள்
Preference shares which carry a right to get arrear of dividend are known as ________.

29. ஒரு பொது வரையறு நிறுமம் தனது கடனீட்டுப் பத்திரங்களை வாங்குமாறு பொது மக்களிடம் அழைப்பு விடும் விளம்பரத்திற்கு பெயர் தகவலறிக்கை
An advertisement inviting the public to buy the debentures of a public company is known as ________.

30. தகுதிப் பங்குகளின் மொத்த இயல் மதிப்பு ₹ 5,000. -ஐ மிகக் கூடாது.
The value of qualification shares of a director in a public limited company shall not exceed ₹ ________ .

31. செயல்முறை விதிகளில் மாற்றம் செய்ய சிறப்புத் தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும்.
Altering the Articles of Association requires ________ Resolution.

32. ஒரு பொது வரையறு நிறும பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டிய உறுப்பினர் குறைவெண் 5 ஆகும்.
The Quorum for a General Meeting of members of a public company is ________.

33. பங்குநர்கள் நிறுமத்தின் உண்மையான உரிமையாளர்கள்
The shareholders are the real ________ of the company.

34. குறுமப்பங்கொப்பம், வெளியிடப்படும் பங்கு முதலில் 90% சதவீதமாக நிர்ணயிக்கப்படுகிறது.
Minimum subscription is fixed at ________ % of the issued capital.

35. ஆயத்தக் கொடுப்பு ஒப்பந்தங்கள் அவ்விடத்து ஒப்பந்தம் எனவும் அழைக்கப்படும்.
Ready delivery contracts are also called as ________.

36. கலைமான் ஊக வணிகர் முனைம வேட்டையாளர். எனவும் அழைக்கப்படுவர்.
Stag is called ________.

37. கூட்டுறவு இயக்கத்தின் தந்தை இராபர்ட் ஓவன்
The father of the Co-operative movement was ________.

38. உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்தை அமைப்பது சிறு தொழில் உற்பத்தியாளர்கள்
An industrial Co-operative is organised by ________.

39. இராணுவப் பொருட்களை உற்பத்தி செய்வதற்கு ஏற்ற தொழிலமைப்பு ________ அமைப்பே ஆகும். துறைமுறை / துறைவாரி
The most suitable form of organisation for manufacturing defence goods is ________.

40. ஏற்கனவே தனியார் துறையில் இயங்கி வரும் தொழில்களை அரசு ஏற்று நடத்தினால் அதனை ________ எனலாம். நாட்டுடைமையாக்கம்
When the government takes over an existing private concern it is called ________.

## பகுதி - ஆ / PART - B

குறிப்பு : (i) **ஏதேனும் பத்து** வினாக்களுக்கு விடையளிக்க. **10x4=40**

(ii) ஒவ்வொரு வினாவிற்கும் **நான்கு** வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க.

Note : (i) Answer **any ten** questions.

(ii) Answer to each question should **not** exceed **four** lines.

41. வாரிய அமைப்பு என்றால் என்ன?
State the meaning of Board Organisation.

42. கர்த்தா என்பவர் யார்?
Who is a KARTA ?

43. கூட்டுருவாக்கம் பெறாத அமைப்புகளின் வகைகளை கூறு.
State the various kinds of Non-corporate enterprises.

44. வரையறுக்கப்பட்ட கூட்டாண்மை என்றால் என்ன?
What is limited Partnership ?

45. கூட்டாண்மை வரைவிலக்கணம் தருக.
Define Partnership.

46. அயல்நாட்டு நிறுமம் என்றால் என்ன?
What do you mean by a foreign company ?

47. கடனீட்டுப் பத்திரம் - வரைவிலக்கணம் தருக.
Define Debentures.

48. சிறப்புத்தீர்மானம் என்றால் எதைக் குறிக்கும்?
What is a special resolution ?

49. நிகழ்ச்சிக் குறிப் பேடு என்றால் என்ன?
What is 'Minutes' ?

50. போல்ட் என்பது யாது?
What is BOLT ?

51. பங்கு மாற்றகத்தின் வரைவிலக்கணம் தருக.
Define a stock exchange.

52. ஒரு நபர் ஒருவாக்கு என்பதன் பொருள் யாது?
What is meant by one man one vote ?

53. தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவு சிறப்பங்காடிகளில் ஏதேனும் 4 எடுத்துக்காட்டுகள் தருக.
Give four examples of Co-operative Super Markets in Tamil Nadu.

54. அரசு நிறுமம் என்றால் என்ன?
Define a Government Company.

55. துறைமுறை அமைப்புக்கு ஏதேனும் 4 எடுத்துக்காட்டுகள் தருக.
Give any four examples of Departmental form of organisation.

## பகுதி - இ / PART - C

குறிப்பு : (i) **ஏதேனும் ஐந்து** வினாக்களுக்கு விடையளிக்க. 5x8=40
(ii) ஒவ்வொரு வினாவிற்கும் **ஒரு பக்க** அளவிற்கு மிகாமல் விடையளிக்கவும்.

Note : (i) Answer **any five** questions.
(ii) Answer to each question should **not** exceed **one** page.

56. பன்னாட்டு நிறுமங்கள் பற்றி நீ அறிவது யாது? அதன் சிறப்பியல்புகள் பற்றி எழுதுக.
What do you mean by multinational companies and explain their features.

57. கூட்டாண்மை நிறுவனத்தை பதிவு செய்யாமையின் குறைபாடுகள் யாவை?
What are the drawbacks of non-registration of partnership firms ?

58. தனி வரையறு நிறுமத்திற்குக் கிடைத்திருக்கும் எவையேனும் 8 சலுகைகளை விளக்கிடுக.
Explain any eight privileges of a Private Ltd. Company.

59. அமைப்பு முறையேட்டின் உள்ளடக்கங்கள் யாவை?
What are the contents of Memorandum of Association ?

60. ஆண்டுப் பொதுக் கூட்டம் குறித்து குறிப்பு தருக.
Write notes on Annual General Meeting.

61. முதலீட்டாளர்களுக்கும், ஊக வணிகருக்குமுள்ள வேறுபாடுகள் யாவை?
Differentiate between Investors and Speculators.

62. கூட்டுறவு சிறப்பங்காடியின் பொருள் தந்து அதன் சிறப்பியல்புகளை தருக.
State the meaning of Super Market and explain its features.

63. அரசு நிறுமத்தின் இயல்புகள் யாவை?
Explain the features of Government Companies.

## பகுதி - ஈ / PART - D

குறிப்பு : (i) **அனைத்து வினாக்களுக்கு** விடையளிக்க. 4x20=80

(ii) ஒவ்வொரு வினாவிற்கும் **இருபக்க** அளவிற்கு மிகாமல் விடையளிக்கவும்.

**Note :** (i) Answer **all** the questions.

(ii) Answer to each question should **not** exceed **two** pages.

64. (அ) பல்வேறு வகையான தொழில் வடிவமைப்புகளில் ஏதேனும் 8 வகைகளைப் பற்றி சுருக்கமாக எழுதுக.

அல்லது

(ஆ) நிறுமச் செயலரின் பணிகளும், கடமைகளும் யாவை?

(a) Describe any eight types of business organisation.

OR

(b) Discuss the functions and duties of a Company Secretary.

65. (அ) தனிநபர் வணிகத்தின் நன்மைகள், குறைகளை விவாதி.

அல்லது

(ஆ) பங்கு மாற்றகத்தின் நன்மைகள், குறைபாடுகள் யாவை?

(a) Discuss the merits and demerits of Sole trading form of business.

OR

(b) What are the benefits and limitations of a Stock Exchange ?

66. (அ) கூட்டாண்மையின் சிறப்புக் கூறுகளை விவரி.

அல்லது

(ஆ) அரசுத் தொழில்களின் நோக்கங்களை விவரி.

(a) Explain the basic features of partnership.

OR

(b) Explain the objectives of state enterprises.

67. (அ) கூட்டுறவுச் சங்கத்தின் நன்மை தீமைகளை விளக்குக.

அல்லது

(ஆ) கூட்டாண்மைக்கும் கூட்டுப்பங்கு நிறுமத்திற்கும் உள்ள வேறுபாடுகளில் ஏதேனும் பத்தினை விளக்குக.

(a) Write the merits and demerits of a Co-operative Society ?

OR

(b) Explain any ten differences between Partnership and Joint stock company.

-oOo-